





வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET e paper

kalmunainet.com








தமிழ் மொழியினருக்கான தகவல் தளம் | பிலவ வருடம் புரட்டாசி 30 (16.10.2021) இதழ் : 35


## வடக்கு, கிழக்கில் மீனவர் விவசாயிகள்

# போராட்டம்

### 17, 18 இல் ஒரே நேரத்தில் நடத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்பாடு

## தெற்கிலும் வெடிக்கும் என்கிறார் சுமந்திரன்

**(அலுவலகச் செய்தியாளர்)**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீனவர்களும் விவசாயிகளும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களில் குதிக்க உள்ளனர்.

நாளை 17ஆம் திகதியும் நாளை மறுதினம் 18ஆம் திகதியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட உள்ள இந்த போராட்டங்களுக்கு, அனைத்து தரப்பினர்களும் முழுமையான ஒத்துழைப்பு தர 02

## அச்சுறுத்தலுக்கு அடி பணியோம்;
## தீர்வு கிடைக்கும் வரை போராட்டம்
### ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஸ்டாலின்

உரிய தீர்வு கிடைக்க பெறுகின்ற வரை தொழிற்சங்க போராட்டம் தொடரும். எவருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியவே மாட்டோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் தொழிற்சங்கங்கள் கடந்த 12 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசின. இச்சந்திப்பு மூன்று மணித்தியாலங்கள் வரை நீடித்தது. 02

## நிதி மோசடி வழக்கு:
## அமைச்சர் பசில் விடுதலை
### குற்றப்பத்திரம் சட்டமா அதிபரினால் வாபஸ்

திவிநெகும *GI* குழாய் நிதி மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக ஆகியோரை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகளான குறித்த இருவர் மீதும் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரங்களை சட்ட மாஅதிபர் வாபஸ் பெற்றதை தொடர்ந்து இவ்வுத்தரவை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் 02

## மீனவர்களின் போராட்டம் சுமந்திரன் எம். பியின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்
### மாகாணசபைக்கான உசுப்பேற்றல்



**(அலுவலகச் செய்தியாளர்)**

மீனவர்களின் ஆர்ப்பாட்ட போராட்டம் என்பது எம். ஏ. சுமந்திரன் எம். பியின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் ஆகும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாடு சரியானது என்று இந்திய அரசாங்கம் கண்டு கொண்டு உள்ளது, விரைவில் உரிய தீர்வுகள் கை கூடும் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தரும், யாழ். மாநகர 02

## பயணக் கட்டுப்பாடுகள் 21வரை இறுக்கமாக கடைப்பிடிப்பு

தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடுமையாகக் கடைபிடிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 19 மற்றும் 20ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அமையப்பெற்று நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப் பெறவுள்ளமையால், அனைத்து மாகாண எல்லைகளிலும் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய 02

## ஹை லாண்ட் பால் மா விலை அதிகரிப்பு

உள்நாட்டு உற்பத்தியான ஹை லாண்ட் பால் மாவின் விலை நேற்று வெள்ளிக்கிழமை முதல் உடனடியாக அமுலுக்கு வருகின்ற வகையில் அதிகரித்து உள்ளது.

400 கிராம் ஹை லாண்ட் பால் மா பைக்கற் ஒன்றின் புதிய விலை 470 ரூபாய் ஆகும். 90 ரூபாயால் விலை கூட்டப்பட்டு உள்ளது.

அதே போல, 01 கிலோ ஹை லாண்ட் பால் மா பைக்கற் ஒன்றின் புதிய விலை 1170 ரூபாய் ஆகும். 225 ரூபாயால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படுகிற பால் மாக்களின் விலை அதிகரித்தமையை அடுத்து, ஹை லாண்ட் பால் மா நிர்வாகமும் விலையை அதிகரிக்கின்ற தீர்மானத்துக்கு வந்திருக்கின்றது.



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நவராத்திரி பூசை வழிபாடு

## ‘அண்ணாத்த’ படத்தில் யாழ். நாதஸ்வரக் கலைஞன்



சூப்பர் ஸ்டார் ரஜினியின் நடிப்பில் வெளியாக உள்ள அண்ணாத்த திரைப்படத்தில் இடம்பெறுகின்ற பாடல் ஒன்றுக்கு ஈழத்தின் நாதஸ்வர இளவரசர் பஞ்சமூர்த்தி குமரன் நாதஸ்வர இசை வழங்குகின்றார்.

படத்தின் இசையமைப்பாளர் டி. இமான் இவருக்கு இம்மகத்தான வாய்ப்பை வழங்கி உள்ளார். 02

## ஆசிய சாதனை புத்தகத்தில் ‘கிராண்ட் மாஸ்டர்’ பட்டம் பெற்று மருதமுனை சிறுமி சாதனை



**(ஏ. எல்.எம்.ஷினாஸ்)**

மருதமுனையைச் சேர்ந்த எஸ். எம். ஆயிஷா இனாரா (4 வயது சிறுமி) *Asia Book of Records* இல் சாதனையாளராக தெரிவு செய்யப்பட்டு கிரேன் மாஸ்டர் *(Grand Master)* பட்டத்தை பெற்று மருதமுனைக்கும் முழு இலங்கைக்கும் பெருமையை சேர்த்துள்ளார்.

2017 மே மாதம் நான்காம் தேதி பிறந்த ஆயிஷா இனாரா தனது பிஞ்சு வயதில் ஆசிய கண்டத்திலுள்ள நாற்பத்தி எட்டு (48) நாடுகளின் முழு பெயரினையும் மிக வேகமாக இருபத்தி மூன்று 02

## வீதி விபத்துக்கள்: பத்து வருடங்களில் 27000 பேர் பலி

கடந்த 10 வருடங்களில் 27,000 பேர் வீதி விபத்துக்களில் இறந்து உள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்து உள்ளார். கடந்த ஜனவரி முதல் இப்போது வரை 1760 பேர் இறந்து உள்ளனர் என்றும் இவர் கூறி உள்ளார்.

போக்குவரத்து சட்டங்கள் மீதான மீறுகைகளே அதிகரித்து செல்லும் வீதி விபத்து மரணங்களுக்கு காரணம் என்றும் குறிப்பிட்டு உள்ளார். குறிப்பாக குடி போதை, போதை பொருள் பாவனை, அதி வேகம் ஆகியன இதை ஊக்குவிக்கின்றன என்றார். 02

## வடக்கு கிழக்கில் மீனவர்...

வேண்டும் என்று எம். ஏ. சுமந்திரன் எம். பி கோரி உள்ளார்.

மீனவர்களின் போராட்டம் 17 ஆம் திகதி இடம்பெறுகின்றது. இழுவை படகுகள் மூலமான சட்ட விரோத மீன் பிடி மீதான தடையை பாரபட்சம் அற்ற விதத்தில் அரசாங்கம் அமுலுக்கு கொண்டு வர வேண்டும், இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு முற்று புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்கள்.

இப்போராட்டத்தின் முக்கிய அம்சமாக முல்லைத்தீவு முதல் பருத்தித்துறை வரை படகு மூலமாக கடல் வழியாக ஆர்ப்பாட்ட பேரணி நடத்தப்படுகின்றது. மறுநாள் விவசாயிகள் கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்னால் காலை 9.00 மணி முதல் ஒரே நேரத்தில் போராட்டம் நடத்தவுள்ளனர்.

இரசாயன உர பாவனை மீதான திடீர் தடை விவசாய உற்பத்திகளை மாத்திரம் அன்றி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஒரேயடியாக பாதித்து இருப்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள தவறி உள்ளது என்பதே விவசாயிகளின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

சுமந்திரன் எம். பி மேலும் தெரிவிக்கையில், இப்போராட்டங்கள் விரைவில் தெற்குக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளன. உண்மையில் ஒரே நாட்களிலேயே தெற்கிலும் நடத்த ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டது, பின் ஏற்பாட்டில் தாமதம் நேர்ந்து விட்டது, ஆயினும் அதற்கான ஏற்பாடு கூட்டமைப்பு அல்ல, ஏற்பாட்டாளர்களுடன் பேசி இருந்தோம் என்றார்.

## நிதி மோசடி வழக்கு...

நாயகம் கித்சிறி ரணவக ஆகியோருக்கு எதிராக கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தல் நடவடிக்கைக்காக GI குழாய்களை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்காக திவி நெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான ரூ. 36.5 மில்லியன் நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான ரூ. 2,292 மில்லியன் நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில், அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 பேர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் நவம்பரில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டதோடு, ரூபா 36.5 மில்லியன் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி, கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது, பஞ்சாங்கம் மற்றும் GI குழாய் விநியோகித்த வழக்கில் பசில் ராஜபக்ஷவுக்கு பிணை வழங்கப்பட்ட போது, விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை கொழும்பு மேல் நீதிமன்றம் நீக்கியிருந்தது.

தற்போது குறித்த வழக்குகளிலிருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணக் கட்டுப்பாடுகள்...

ராஜபக்ஷ, பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நேற்று (15) முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18-19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

## அச்சுறுத்தலுக்கு அடி பணி...

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று கட்டங்களில் தீர்த்து வைப்பார் என்று இதன்போது பிரதமர் வாக்குறுதி வழங்கினார்.

இது குறித்து தொழிற்சங்கங்கள் கூடி ஆராய்ந்து உரிய தீர்வு கிடைக்கின்ற வரை போராட்டங்களை தொடர்வது என முடிவெடுத்தன.

ஜோசப் ஸ்டாலினை கல்முனைநெற் இது தொடர்பாக கேட்டபோது; அமைச்சரவை தீர்மானம், பிரதமருடனான பேச்சுவார்த்தை ஆகியவற்றின் மூலம் நாம் எதிர்பார்த்த தீர்வை எட்ட முடியவில்லை, இழுத்தடிக்காமல் ஒரேயடியாக எமது பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும், உரிய தீர்வு கிடைக்க பெறுகின்ற வரை எமது போராட்டம் தொடரும். எமது போராட்டத்துக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட வண்ணம்தான் உள்ளன, ஆயினும், நாம் எவருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியவே மாட்டோம் என்றார்.

கடந்த ஜூலை 12ஆம் திகதி முதல் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## தாக்குப் பிடிக்க முடியாது

சரியான பொருளாதார நிபுணத்துவம் இன்மையும், முறையான நிதி முகாமைத்துவம் இன்மையுமே நெருக்கடிகளுக்கு காரணமாக அமைகின்றது.

இலங்கையில் பொருளாதார நிபுணர்கள் இல்லாமல் இல்லை. அவர்களின் ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பது தான் வேதனைக்குரிய விடயம். தகுதி வாய்ந்த நிபுணர்கள்எல்லாம்அரசியல்முலாம்பூசப்பட்டு மறைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

நெருக்கடி நிலையைத் தெளிவுபடுத்தி மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகினார். இதற்கு அரசியல் அழுத்தங்கள் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், எம்பியாக இருந்த, முன்னாள் மத்திய வங்கி ஆளுநராக அஜித் கப்ரால், மீண்டும் ஆளுநராக பதவி ஏற்றார். இது தலைவலிக்கு தலையணையை மாற்றுவதற்கு ஒப்பான செயல்பாடாகும்.

மத்திய வங்கி தான் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. அரசியல் தலையீடுகள் இல்லாத நிதி முகாமைத்துவம் இதன் சுதந்திரமான செயல்பாடுகளுக்கு வித்திடும். அரசியல் தலையீடுகள் அற்ற, நிதி முகாமைத்துவம் சரியாக இருந்திருந்தால், நாடு இந்த நெருக்கடியை சந்திக்க எந்த வகையிலும் வாய்ப்பில்லை.

“வியாபாரிகளின் செயல்பாடுகளால் அரசின் கொள்கையை மாற்றிக் கொள்ள நேர்ந்துள்ளது’’ என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியிருப்பது நகைப்பிற்கு இடமானது. பொருளாதாரத்தில் சிறப்பு தேர்ச்சி பெற்ற ஒருவர் இப்படி கூறுவது தவறை மறைக்கும் செயல்.

எனவே, தவறுகளை திருத்தி முன்னேறினால் மட்டுமே, நாடு நெருக்கடி நிலையிலிருந்து மீட்சி பெறும்.

நெருக்கடி நிலை தொடர்ந்தால் நாட்டில், பஞ்சம், பசி, பட்டினி மட்டுமல்ல, வன்முறைகளும் திருட்டுக்களும் அதிகரித்து பண்பாட்டுச் சீரழிவுகள் ஏற்படலாம்.

ஆகவே, புத்திசாலிகளை பயன்படுத்தி அப்பாவி மக்களை காப்பாற்றுங்கள்.

### 2008 இல் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பேசும் 11 இளைஞர்கள்:

# சட்ட மா அதிபரின் தீர்மானத்தை எதிர்த்து பெற்றோர்கள் வழக்கு

2008 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பேசும் ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 இளையோர்கள் சம்பந்தப்பட்ட வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டு உள்ளது.

கடற்படை தளபதியாக இருந்த வசந்த கருணாகொடவுக்கு எதிரான குற்ற பத்திரத்தை வாபஸ் பெறுகின்ற சட்ட மா அதிபரின் தீர்மானத்தை மாணவர்களின் பெற்றோர் சவாலுக்கு உட்படுத்தி உள்ளனர்.

இவ்வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கருணாகொடவுக்கு எதிரான குற்ற பத்திரத்தை முன்கொண்டு செல்ல போவதில்லை என்ற தீர்மானத்தை சட்ட மா அதிபர் திணைக்களம் கடந்த 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிய கொடுத்தது.

இந்நிலையில் ரஜீவ் நாகநாதன், விஸ்வநாதன் பிரதீப், முஹமட் டிலான், முஹமட் சஜித் ஆகிய மாணவர்களின் பெற்றோர் இத்தீர்மானத்துக்கு தடை விதிக்க கோரி மனு தாக்கல் செய்து உள்ளனர்.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கருணாகொட, சட்ட மா அதிபர் ஆகியோருக்கு இந்நீதிமன்றம் அழைப்பாணை வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டு உள்ளது.

சட்ட மா அதிபரின் தீர்மானம் காரணம் அற்றது, பாரபட்சம் ஆனது, சட்ட விரோதமானது, அரசியல் நோக்கம் கொண்டது, இயற்கை நீதிக்கு புறம்பானது என்று மனுதாரர்கள் தெரிவித்து உள்ளனர்.

மனுதாரர்களின் பிள்ளைகள் அடங்கலாக 11 பேர் கடத்தப்பட்டு, கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள பிட்டு வம்புவ என்று அழைக்கப்படுகின்ற முகாமில் சட்டவிரோதமாக தடுப்பில் போடப்பட்டனர் என்றும் மனுதாரர்கள் பிள்ளைகள் திருகோணமலை கடற்படை தளத்தில் உள்ள கன்சைட் சட்டவிரோத முகாமில் போடப்பட்டு இருந்தனர் என்றும் குற்ற புலனாய்வு பொலிஸாரின் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டது என்று மனுவில் முறையிடப்பட்டு உள்ளது.

## மீனவர்களின் போராட்டம்...

சபை உறுப்பினருமான சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தெரிவித்தார்.

இவர் இது குறித்து கல்முனைநெற்றுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு

சுமந்திரனுக்கு பொழுது போகவில்லை என்று நினைக்கின்றேன். அதே நேரத்தில் மாட்டை கொண்டு புல் தரையில் உழுகின்ற வித்தை அவருக்கே கை வந்த கலை. மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் வருகின்றன அல்லவா?

மீனவர்களின் ஆர்ப்பாட்டம் என்பது சுமந்திரனின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் ஆகும். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கோ அல்லது தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட பங்காளி கட்சிகளுக்கோ மீனவர்கள், விவசாயிகள் ஆகியோரின் பெயரிலான இவரின் ஆர்ப்பாட்டங்கள் குறித்து முன்னறிவிப்புகள் வழங்கப்பட்டதாக இல்லை,

இப்போதுதான் அவசரமாக விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன என்று அறிகின்றேன். மீனவர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. சரியான முறையில் அவை அணுகப்பட்டு தீர்வுகள் எட்டப்பட வேண்டும்.

கடற்றொழில் அமைப்புகளை சேர்ந்த சிலரை சுமந்திரன் பிடித்து வைத்து கொண்டு பூச்சாண்டி காட்டுகின்றார். இந்திய மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக விஜயம் மேற்கொண்டு வந்த சுப்பிரமணியன் சுவாமி கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பேசினார்.

பிற்பாடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாடு சரியானது என்று வரவேற்று அறிக்கை வெளியிட்டார். அதாவது இந்திய அரசாங்கம் அமைச்சர் டக்ளஸின் நிலைப்பாடு சரியானது என்று கண்டு கொண்டு உள்ளது. சுவாமி புறப்பட்டு டில்லி சென்று உள்ளார்.

விரைவில் உரிய தீர்வுகள் கை கூடும் என்று நம்பிக்கை உள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க,சுமந்திரன் எம். பியின் நிகழ்ச்சி நிரலிலான மீனவர் போராட்டம் அர்த்தம் அற்றது. அவருக்கு ஒரு மேடை தேவைப்படுகின்றது. அதே நேரம் மாகாண முதலமைச்சர் பதவி கனவுகளில் இருப்பவர்களுக்கு மக்களை உசுப்பேற்ற வேண்டிய தேவை உள்ளது.

## வீதி விபத்துக்களில்...

இந்நிலையில் அரசாங்கம் வீதி போக்குவரத்துகள் இடம்பெறாமல் தடுக்கவும், தவிர்க்கவும் புதிய நடைமுறைகளை அமுலுக்கு கொண்டு வர இருக்கின்றது என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 30 வருட யுத்தத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கையை காட்டிலும் 10 வருட கால வீதி விபத்துகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று அமைச்சர் தெரிவித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அண்ணாத்த படத்தில்...

இது குறித்து இமான் முகநூலில் வெளியிட்ட பதிவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கே. பி. குமரனை அண்ணாத்த திரைப்படத்தில் அறிமுகம் செய்து

வைப்பது பெருமகிழ்ச்சியாக உள்ளது என்று குறிப்பிட்டு உள்ளார்.

இதே நேரம் இம்மகத்தான வாய்ப்புக்காக பெற்றோர், இறைவன் ஆகியோருக்கும் குமரன் நன்றி தெரிவித்து உள்ளார்.

இவர் நவராத்திரியில் பங்கேற்று இளையராஜா உள்ளிட்ட திரையுலக பிரபலங்களுடன் எடுத்து உள்ள புகைப்படங்கள் சக்கை போடுகின்றன.

இவர் பிரபல நாதஸ்வர மேதை வி. கே. பஞ்சமூர்த்தியின் புதல்வர் ஆவார்.

## ஆசிய சாதனை புத்த...

செக்கன்களில் கூறி இந்த சாதனையை நிகழ்த்தி ‘கிரேன் மாஸ்டர்’ எனும் பட்டத்தை பெற்று முழு நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பல திறமைகளை தன்னகத்தே கொண்ட இந்த சிறுமி மூதூர் அரபுக்கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும் மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட மௌலவி எஸ்.முஹம்மது புர்கான் (நத்வி) ஆசிரியரினதும் மருதமுனையைச் சேர்ந்த விசேட கல்வி ஆசிரியையான ஏ.ஆர். பாத்திமா நதா ஆகியோரது சிரேஷ்ட புதல்வியாவார்.

இந்த சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேசத்தின் கல்வியலாளர்கள் பலரும் தற்போது பாராட்டி வருகின்றனர். இவருக்கான சான்றிதழ் மற்றும் பரிசு என்பன குறித்த நிறுவத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



கல்முனை NET
kalmunainet.com
e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு.**

தீயவர்கள் தீவினை செய்ய அஞ்சமாட்டார்கள்; தீவினையால் மகிழ்ச்சி ஏற்படுவதாயினும் அதனைச் செய்திடச் சான்றோர் அஞ்சி நடுங்குவார்கள்.

# தாக்குப் பிடிக்க முடியாது

என்ன நடக்கிறது...?

என்னதான் நடக்கிறது...?

நாட்டு நிலைமை, இப்படித்தான் கேட்க வைக்கிறது.

மூச்சுவிட முடியாத அளவுக்கு விலைவாசி விண்ணை தொட்டு கொண்டிருக்கும் நிலையில், மக்கள் மிகவும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அல்லல்படும் மக்கள், மூன்று நேர உணவைக் கூட உண்ண முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவு பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டு இருக்கிறது. சோத்துப் பார்சல்கள், கொத்து ரொட்டிகள், சாதாரண சிற்றுண்டிகள், தேநீர் மற்றும் குடி பானங்களின் விலைகளை பார்த்தால், பசியும் தாகமும் பறந்து விடுகின்றன.

சாதாரண மக்களின் உற்சாக பானமாக திகழ்கின்ற தேனீர் கூட 50 ரூபாவை எட்டியிருக்கிறது.

பேக்கரி உரிமையாளர்களும் சிற்றுண்டி தயாரிப்பாளர்களும் 10 ரூபாவால் விலை அதிகரிப்பதாக அறிவித்திருந்தாலும், அவைகளின் விலைகளிலும் கட்டுபாடில்லை. இந்த நிலையில், தினக் கூலிகளின் பரிதாபம் சொல்லில் அடங்காது. உழைத்துக் களைத்துப் போய் சிறு தொகைப் பணத்துடன் வீடு சென்றால், குடும்ப பசியை போக்க முடியாத அவலம்.

பணம் படைத்தவர்களுக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் உண்பவர்களுக்கும் விலை ஏற்றங்கள் சாதாரணமாக இருக்கலாம். அல்லது தாக்கத்தை ஏற்படுத்தாமல் கூட இருந்து விடலாம். ஆனால், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 60 வீதமான மக்களின் நிலையை ஆட்சி பீடத்தில் இருப்போர் சற்று சிந்தித்தார்களா?

அத்தியாவசிய பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியதன் விளைவை நாடும், நாட்டு மக்களும் இன்று எதிர் கொள்கின்றனர். டொலரின் பெறுமதியை கட்டுப்படுத்தி பொருளாதார தளம்பல் நிலையை சீரமைக்க முடியாமல் போனதனால், நாடு இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட், அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியிருக்கிறார். நோட்டுகளும் புதிது புதிதாக அச்சிடப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டு இருக்கின்றன.

இந்த நெருக்கடிக்கு இவைகளெல்லாம் தீர்வல்ல என பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் விலையேற்றத்தை கட்டுப்படுத்த முடியாது. மக்களின் பசியைப் போக்க இயலாது; பணவீக்கத்துக்கும் தீர்வு காணமுடியாது. நாட்டில் புழக்கத்தில் உள்ள பணத்தின் பெறுமதி குறைவடைவதற்கு டொலரின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக அமையவில்லை.

உண்மையில், டொலரின் சந்தைப் பெறுமானத்துக்கு ஏற்ப, நமது திட்டமிடல் இல்லை என்பது கவலைக்குரியது. பொருளாதார நெருக்கடிக்கும் வீழ்ச்சிக்கும் கடந்தகால நல்லாட்சியையும் கொரோனாவையும் காரணமாகக் காட்டுவது இயலாமையின் வெளிப்பாடாகும். கொரோனா நெருக்கடியில் சிக்கித் தவித்த நாடுகளெல்லாம் இன்று தன் நிறைவு பொருளாதாரத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றன.

பொருளாதாரத்தில் மிகவும் பலவீனமடைந்திருந்த பங்களாதேஷ் இன்று நமக்கு டொலரில் கடனுதவி வழங்கும் நாடாக உருவெடுத்திருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகள் கொரோனாவினால் சின்னாபின்னமாகி போன நாடுகள். பொருளாதாரத் திட்டமிடல்களால் இன்று மீள எழுச்சி பெற்று நிற்கின்றன.

மிகுதி 2ஆம் பக்கம்

# 20ஆவது திருத்தம் தோல்வி:

## 19ஆவது திருத்தமே பொருத்தம்



‘ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு அரசியல் அனுபவம் குறைவு என்பதால் பிரதமர் முன்வந்து ஏனைய அனுபவம் மிக்க அமைச்சர்களுடன் இணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தோல்வியடைந்தமையை அவர் ஏற்றுள்ளார். எனவே, அதனை இரத்து செய்து அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத் தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகிக்க வேண்டும்’ இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட காணொலியில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், அவரின் அரசியல் அனுபவம் வரையறுக்கப்பட்டவை என்றும், எனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வந்து, அரசியல் அனுபவம்மிக்க அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது சிறந்தவொரு நிலைப்பாடாகும்.

ஏனென்றால், அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் தோல்வி என்பதை அவரே ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த 20ஆவது திருத்தத்தின் மூலம் தான் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரம் அந்தத் திருத்தத்தின் இல்லாமல் போனது. பொருளாதாரத்திலும் கொரோனாவிலும் அரசாங்கத்திற்குள் ஓர் அரசாங்கம் செயல்பட்டதை காண முடிந்தது.

இதேபோன்று, அரிசி விலை தொடர்பிலும் அரசாங்கத்திற்கு வெளியில் இன்னொரு அரசாங்கமொன்று காணப்பட்டது.

இதன் பிரதிபலன் என்ன? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக இல்லாமல் போனது. எதிர்பார்ப்புக்கள் சரிவடைந்தன. அவ்வாறெனில், இந்த முறைமையின் மூலமாக சாதகமான பிரதிபலன் கிடைக்கவில்லை.

எனவே, ஜனாதிபதி தெரிவித்ததைப் போன்று சம்பிரதாய அமைச்சரவை நிர்வாகத்திற்கு செல்வது சிறந்தது.

ஆகவே, ‘20ஆவது திருத்தத்தை இரத்துச்செய்து, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்ல வேண்டும்’ என்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம் என்பது நல்லாட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட திருத்தம் ஆகும். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்தல் பாராளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் அதிகாரங்களை வழங்குகின்றது.

அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 19 திருத்தங்களில் 19ஆவது திருத்தம் முன்னேற்றகரமாக இருந்தாலும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் நடந்த அதிகார மோதல் தான் நல்லாட்சிக்கு முடிவாக அமைந்தது; கலைக்கப்பட்டது.

# இறுக்கமான பிணை நிபந்தனை;

## ரிசார்ட் வெளிநாடு செல்ல தடை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் சிறுமி ஹிஷாலினி மரண வழக்கு ஆகிய இரு வழக்குகள் தொடர்பிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அந்த வகையில், கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி கைதான ரிஷாட் பதியுதீன் எம்.பி சுமார் 6 மாதங்களின் பின் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் (PTA) கீழ் தொடரப்பட்ட வழக்கு, இன்று கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவருக்கு பிணை வழங்க நீதவான் உத்தரவிட்டார்.

தலா ரூ. 50 இலட்சம் கொண்ட இரு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சிஐடியில் முன்னிலையாக வேண்டுமென அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், வெளிநாடு செல்ல தடை விதித்த நீதவான், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு அவருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணி புரிந்த 16 வயது ஹிஷாலினி ஜூட் குமார் எரிகாயங்களுடன் மரணமடைந்த சம்பவம் தொடர்பான ஐந்தாவது சந்தேகநபராக பெயரிடப்பட்டிருந்த வழக்கிலிருந்தும் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை (14) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதவான் பிணையில் செல்ல உத்தவிட்டார்.

தனது கைது தொடர்பில் ரிஷாட் பதியுதீன் தாக்கல் செய்த, அடிப்படை உரிமை மனு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை (15) இடம்பெறவிருந்த நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர், இ.போ.ச. பஸ்களை முறைகேடாக பயன்படுத்தியதாக தெரிவித்து கடந்த வருடம் ஒக்டோபர் 19ஆம் திகதி இஜாயினால் கைது செய்யப்பட்ட ரிஷாட் பதியுதீன் ஒரு மாதத்தின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெண்களுக்கென தனி அரசியல் கட்சி உருவாக்குவதே எனது கனவு!

**உலக அரசியலில் பெண்களின் வருகை என்பது மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக நடைபெற்று முடி வடைந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை சொல்ல முடியும். அங்கு வாழ்ந்த இந்திய வம்சா வளி பெண் கமலா ஹாரிஸ் அந்த நாட்டின் அரசியலை மாற்றியதுடன் இன்று துணை ஜனாதிபதியாகவும் பதிவியேற்றுள்ளார். இது பெண்களுக்கு கிடைத்த அடையாளமாகவும் மிகப்பெரிய வெற்றியாகவும் கருதப்படுகின்றது.**

**இலங்கையின் சனத்தொகையில் 51 வீதமாக பெண்கள் இருந்தாலும் அரசியலில் உள்ள பெண் களின் சதவீதம் 5 ஆகவே காணப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் பெண்களுக்காக 25 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என சட்டம் சொல் லியது. ஆனாலும் அது நடைமுறையில் சாத்திய மாகவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.**

**இவ்வாறு பல தடைகளை உடைத்து அவற்றில் இருந்து வெளிவந்து தனது சமூக சேவை மூலம் சாதித்து அரசியலுக்குள் நுழைந்து பெண்களுக்கு உதாரணமாக செயற்படும் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரான தர்ஜனி பார்த்திபனுடனான நேர்காணலை உங்களுடன் பகிர்ந்து கொள்கின் றேன்.**

**? அரசியலின் மூலம் பலவற்றை சாதிக்க நினைக்கும் உங்களை பற்றிய அறிமுக மொன்றை வழங்க முடியுமா?**

மூவினங்களும் ஒற்றுமையுடன் வாழும் அம்பாரை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் மத்திமுகாம் 2 இல் இயற்கை அழகுமிகு 4 ஆம் கிராமத்தை பிறப்பிடமாக கொண்ட நான் உயர்தரம் வரை கல்வியை கற்றுள்ளேன். எனது கணவர் பார்த்தீபன் ஒரு பட்டதாரி. இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாய்.

இளமையில் பல துன்பங்களை அனுபவித்தவள். 1990 ஆண்டில் எனது அப்பாவை பயங்கரவாதம் எனும் காரணத்திற்காக பறிகொடுத்தவள். இதனால் அம்மாதான் என்னை கஷ்டத்தின் மத்தியில் படிப் பித்தார். இவ்வளவு சிக்கலுக்கும் மத்தியில் வளர்ந்த நான் பல கஸ்டங்களை தாண்டி இன்று நாவிதன் வெளி பிரதேச சபை உறுப்பினராக உள்ளேன். பெண் களும் இந்த நாட்டில் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும். அவர்களும் சகல துறைகளிலும் ஆண்களுக்கு சமனானவர்களாக இருக்க வேண்டும் என நினைப்பவள்.

**? தாங்கள் அரசியல் பயணத்தின் ஆரம்பம் எங்கே எப்போது எப்படி ஆரம்பமானது ?**

அரசியல் எனும் போது பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தாலும் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலே எனக்கு அடையாளத்தை தந்தது. இந்த தேர் தலில் போட்டியிட்ட நான் சபை உறுப்பினராக தெரிவானேன். துணிவாக பல விடயங்களில் பேசினேன். ஏனென்றால் துணிவாக பேசும் சக்தி என்னிடம் இயற்கையாகவே உள்ளது.

எனது ஊர் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத் தில் மிகவும் பாதிக்கப்பட்டது. இதனால் இங்கு பல தேவைப்பாடுகள் மக்களிடம் இருந்தது. இதனை சரி செய்வதற்கு அரசியல் பலம் தேவைப்பட்டது. இதனால் பல அரசியல்வாதிகளை சந்திக்க வேண்டிவந்தது. அப்படி சந்தித்தாலும் அவர்களால் ஒன்றுமாகவில்லை. அதனால் நானே அரசியலில் இறங்க முடிவு செய்தேன். இந்நிலையில் களத்தில் இருந்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முயற்சி செய்தேன். இந்தவேளையில் பலரது ஒத்துழைப்பினால் தேர்தலில் களம் இறங்கினேன். மக்கள் ஆதரவால் வெற்றியும் பெற்றேன். இதுவே எனது அரசியல் பயணத்தின் ஆரம்பம் எனலாம்.

**? அரசியலுக்கு வருவதற்கு காரணம் என்ன?**

நான் ஏற்கனவே சொன்னதுபோல் மக்களின் தேவை கருதியே எனது அரசியல் வருகை இடம்பெற்றது. குறிப்பாக அரசியலில் பெண்களுக்கான சமத்துவம் வழங்கப்படுவது குறைவு. இதற்கு பெண்களின் அரசியல் விருப்பின்மை என பலர் இலகுவாக கூறி தட்டிக்கழிப்பதை கண்டேன். அக்கருத்தை இல்லாமல் செய்வதே எனது முதல் நோக்கம். மேலும் மக்க ளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை தட்டிக்கேட்பதும் மற்றுமொரு நோக்கம்.

அவ்வாறு வருவதற்கு தடையாக இருந்த காரணிகள் எவை என கருதுகின்றீர்கள்? பொதுவாக நான் ஒரு பெண் என்பதே தடைக்கான பிரதான காரணம். பெண்கள் எல்லாம் எப்படி அரசியல் செய்ய முடியும் எனும் குறைவான மதிப்பீடு. அரசியல் என்றால் இரவு பகல் இடம் பாராது செல்ல வேண்டும். இதுவெல்லாம் பெண்களால் முடியுமா எனும் ஏளனப்பார்வை. மாற்றுக்கட்சிகளினதும் அக்கட்சி ஆதரவாளர்களதும் தவறான பிரச்சாரம். இவைகளே தடைகளை தந்தது.



**? குடும்பத்தையும் அரசியலையும் எவ்வாறு ஒரே சமயத்தில் மேற்கொள்கின்றீர்கள்?**

குடும்பமும் அரசியலும் என்னைப்பொறுத்தமட்டில் இரு கண்கள். இரண்டையும் வேறாக பார்த்ததில்லை. இதனால் இரண்டிலும் சிக்கல் இல்லாமல் கொண்டு செல்கின்றேன். ஆனாலும் பெண்களுக்கான தனித்து வத்தை பாதுகாக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றேன்.

**? தங்களது கணவரின் ஒத்துழைப்பு மற்றும் பிள்ளைகளின் பங்களிப்பு எவ்வாறு உங்கள் அரசியலுக்கு உதவுகின்றது?**

அவர்களது ஒத்துழைப்பு தாராளமாக கிடைக்கின்றது. இதனால் அரசியலில் பலவற்றை சாதிக்க முடிந்தது. ஆண்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதன் காரணமாக எனது நிலை அறிந்து எனது குடும்பம் செயற்படுகின்றது. இவ்வாறே அனைத்து பெண்களுக்கும் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**? உங்கள் கிராமத்தவர் உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்கின்றார்களா? அவர்களை பொறுத்த மட்டில் உங்களை எவ்வாறு நோக்குகின்றனர்?**

எப்பொழுதுமே பெண்களின் கருத்தை அல்லது செயற்பாடுகளை சமூகம் உடனடியாக ஏற்றுக்கொள்வதில்லை. அதற்கு நான் மட்டும் விதிவிலக்கல்ல. அரசியலில் மாத்திரமல்ல அதற்கு முன்பாக சமூக சேவையில் இருந்தபோதும் பலர் பலவிதமான கருத்தை சொன்னார்கள். ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டி நல்ல பல விடயங்களை பெண்ணாக இருந்து செய்து காட்டினேன். அதன் பிற்பாடே எனது கிராமத்தவர்கள் எனது கருத்துக்களை ஏற்க தொடங்கினர். தற்போது அவர்களே ஆதரவாகவும் உள்ளனர். இப்போது என்னால் செய்யப்படும் எந்த அபிவிருத்தி ஆனாலும் கிராமத்தில் உள்ள முக்கியமானவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே மேற்கொள்வேன்.

**? ஆண் பெண் சமத்துவம் பேணப்படல் வேண்டும் எனும் கருத்து பரவலாக பேசப்படும் நிலையில் உங்களது கருத்து என்ன?**

உண்மையாக ஆண் பெண் சமத்துவம் என்பது இப்போதும் பேச்சளவிலேயே உள்ளது என்பது எனது கருத்து. உதாரணம் உள்ளூராட்சி தேர்தல். அத்தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீடு 25 சதவீதமாக அமைய வேண்டும் என சட்டம் சொல்லியது. ஆனாலும் அதற்குள்ளும் பல குளறுபடிகள் நடைபெற்றது. இப்பொழுது கூட குறைவான பெண்களே உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினராக உள்ளனர். இந்நிலை மாறவேண்டும்.

இதனடிப்படையில் எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீடு சரியாக வழங்கப்படவேண்டும் என அரசியல் கட்சிகளிடம் கேட் டுக்கொள்கின்றேன். ஆனாலும் அவ்வாறு வழங்கும் பட்சத்தில் ஆண்களின் கைகளை விட பெண்களின் கை ஓங்கிவிடும் என பலர் அச்சம் கொள்வதை காண முடிகின்றது. அரசியலுக்குள் தற்போது இருக்கும் பெண்களை கூட சுதந்திரமாக பேசுவதை தடுக்கின்றனர். ஆண் பெண் சமத்துவத்தை ஆண்கள் விரும்பவில்லை என்பதையே இந்நிலை உணர்த்துகின்றது. என் அரசியல் வாழ்வில் இதைன உணர்ந்துள்ளேன்.

நமது நாட்டில் ஆண் பெண் சமத்துவம் பேணப்படுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? நிச்சயமாக இல்லை. சமத்துவம் என்பது வீடாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் பேச்சளவில் உள்ளது என்பதே உண்மை. இது நடைமுறைக்கு எப்போது வருகின்றதோ அன்றே பெண்கள் முழு சுதந்திரத்தையும் பெற்றவர்களாக வாழ முடியும்.

**? அரசியலுக்கு வரும் முன் உங்கள் அனுபவம் எப்படி இருந்தது? இப்போது எப்படி உள்ளது?**

அரசியலுக்குள் வருவதற்கு முன் ஒரு குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்த நான் இன்று அதன் எல்லை விரிவடைந்துள்ளதை உணர்கின்றேன். அன்று வீடு மட்டுமே எனது எண்ணத்தில் இருந்தது. இன்று நாட்டைப்பற்றியும் சிந்திக்க வேண்டியவளாக மாற்றப்பட்டுள்ளேன். இவ்வாறான மாற்றம் ஒவ்வொரு பெண்களிடமும் உருவாக வேண்;டும் என எதிர்பார்க்கின்றேன்.

உங்களால் சாதிக்க முடிந்தவை மற்றும் சாதிக்க நினைப்பவை தொடர்பில் உங்களது கருத்து என்ன? முக்கியமாக சிறுவர்கள் துஸ்பிரோயகத்திற்கு எதிராக குரல் கொடுத்ததுடன் அவ்வாறு செயற்பட்டவர்களுக்கு தண்டனையும் பெற்றுக்கொடுத்ததை கூற முடியும். தந்தையை இழந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி க்காக உதவியமை, மாணவர்களுக்கான கல்வியை பெற்றுக்கொடுப்பதில் ஆசிரியர்களின் உதவியோடு செயற்பட்டமை, மரண சடங்குகளை கூட நடத்த முடியாத ஏழை குடும்பங்களுக்கு கைகொடுத்து ள்ளமை போன்ற செயற்பாடுகள் திருப்தியை தந்து ள்ளது. மேலும் பெண்களுக்கு எதிரான சகல அடக்கு முறைகளுக்கும் எதிராக குரல் கொடுத்து வெற்றி பெற்றமை போன்றவற்றை சொல்லலாம். அத்தோடு கொரோனா காலகட்டத்தில் கூட மக்களுக்கு பல சே வைகளை வழங்கினேன்.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் குரல் கொடுத்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதுடன் நமது மக்களின் வாழ்க்கையில் சுபீட்ச த்தை ஏற்படுத்த வழிகாட்டுதல் என தொடர்வதுடன் முக்கியமாக பெண்களை ஒன்று திரட்டி அவர்களை அரசியலுக்குள் உள்வாங்கி பெண்களுக்கான தனியான அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க முயற்சிப்பது நீ ண்ட கால கனவாக உள்ளது. இதுவே நான் சாதிக்க நினைப்பவை.



**? உங்களை போன்ற பெண்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

பெண்கள் வீட்டிற்குள் முடங்கிக்கிடக்காது வெளியிலே வரவேண்டும். பெண்கள் நினைத்ததை ச ாதிக்க வேண்டும். வீடாக இருந்தாலும் அரசியலாக இருந்தாலும் பெண்களின் தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டும். ஆண்கள் ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும். பெண்களால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை நிரூபிக்க வேண்டும். நமது நாட்டின் கண்களாக பெண்கள் எப்போதும் இருக்க வேண்டும். இதற்காக அனைத்து பெண்களும் அரசியலுக்குள் வர வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்.

**நேர்காணல்: வி. சுகிர்தகுமார்**

# தே. கா. இனங்களைப் பிரிக்கும் அரசியலில் ஈடுபடுவதில்லை

**தமிழர்கள் எங்கள் மனங்களிலே குடிகொள்ளும்போது, வெறும் எல்லைகளின் அடையாளங்களுக்காக நடப்பட்டுள்ள பலகைகள் பற்றி நாம் பொருட்படுத்தப் போவதில்லை என, அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் எம். ஏ. றாசிக் தெரிவித்தார். கல்முனைநெற் மின் இதழுக்கு அவர் வழங்கிய நேர்காணல் இது.**



**தமிழர்கள் எப்போதும் எங்கள் மனங்களில் குடி கொள்கின்றனர்**

***? அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக இரண்டு தடவைகள் (2011 முதல் 2021) வரை பதவியேற்றுள்ள நீங்கள் அடையாளப் படுமளவுக்கு எதைச் செய்துள்ளீர்கள்?***

பதவிகள் ஆண்டவனால் அருளப்படும் நன்கொடைகள். இதை, அமானிதமாகக் கருதித்தான், நான் சேவை செய்கிறேன். எல்லோரும் அடங்கப்போகும் மண்ணுக்கு மரியாதை செய்யும் பொருட்டு, எனது சபைக்கு உட்பட்ட பட்டியடிப்பட்டி மையவாடியைப் புனரமைத்து ஒளியூட்டி உள்ளேன். இதை, இன்று எல்லோரும் வரவேற்கின்றனர்.

இன்னுமொன்றுள்ளது, பலாத்காரமாக எமது உயிர்களைப் பறிக்க வந்த கொரோனாவை ஒழிப்பதற்காக தடுப்பூசிகளை ஏற்றுவதற்கும், இதில், மக்களுக்கிருந்த அச்சங்களைப் போக்குவதற்கும் உச்சக் கட்ட உழைப்பில் ஈடுபட்டேன்.

***? அக்கரைப்பற்றுப் பிரதேச சபையின் எல்லையோடு ஒட்டியவாறு உள்ள பிரதான பாலத்தடியில், ஆலையடிவேம்பு பிரதேச சபையின் அடையாளப் பலகை நடப்பட்டுள்ளதே! இதில், ஏதாவது எல்லைத் தகராறுகள் இருக்கின்றதா?***

இதில், எந்தப் பிரச்சினையும் இல்லை. தமிழர்கள் எங்களின் மனங்களில் குடிகொள்கின்றனர். எங்களது, தேசிய காங்கிரஸ் இனங்களைப் பிரிக்கின்ற, சமூகங்களை மோதவிடுகின்ற அரசியல் செய்வதும் இல்லை. மானிடம் வாழ வேண்டும், தேசப்பற்றில் ஊற வேண்டும். இந்த இலட்சியத்தில் உள்ள எமக்கு, நிர்வாக எல்லைகளை அடையாளமிடும் பெயர்ப் பலகைகள் எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தாது.

***? உள்ளூராட்சி சபைகளை ஒரு வருடம் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தால், தொடர்ந்தும் பதவியில் நிலைப்பீர்களா? அல்லது சுழற்சி முறைக்கு இடமளித்து பதவி துறப்பீர்களா?***

கட்சியின் தீர்மானத்துக்கு கட்டுப்படுவேன். கொரோனாவால் எங்களது இரண்டு வருடம் முடங்கிய நிலையில் கழிந்துவிட்டது. இந்தக் காலங்களில், உயிர்களுக்கு அஞ்சி எவரும் வெளியில் வரவில்லை. ஆனாலும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் களத்தில் நின்றேன். இருந்தபோதும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியாமல் போயிற்று. எனவே, நீடிக்கப்பட்ட காலத்தைச் சரியாகப் பயன்படுத்த எனது பதவிகள் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எட்டு வருடங்கள் தவிசாளராக இருந்த அனுபவத்தில் இதைச் சொல்கிறேன்.

***? மிகச்சிறிய பரப்புடைய உங்களது பிரதேச சபையில், மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை பற்றி விளக்க முடியுமா?***

மீன்பிடி, விவசாயம், கைத்தொழில், கால்நடைவளர்ப்பு என்பவைதான் எனது பிரதேச மக்களின் பிரதான தொழில்கள். இதில், கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சவால்களுக்கு உள்ளாகின்றனர். மேய்ச்சல் தரை இல்லாது அலைக்கழியும் கால்நடைகள் பிரதேசவாசிகளின் நெற்செய்கை, உணவுப்பயிர்களையும் அழித்துவருகின்றன.

வேறு பிரதேசங்களில், மேய்ச்சலுக்கு எடுத்துச் செல்வது இன்றைய கட்டுப்பாடுகளால் இயலாதுமுள்ளன.

பாலுக்குத் தட்டுப்பாடும், சேதனப் பச ளை ஊக்குவிக்கப்படும் சூழலிலும் கால்நடையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**நேர்காணல்: நிப்ராஸ்**

# இந்தியாவை புறமொதுக்கி இலங்கை செயல்பட முடியாது!

*இலங்கை, இந்திய ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த தமிழர் தரப்புக்கள் ஐக்கிய அணியொன்றை அமைத்து ஒன்றுபட வேண்டும் என்று இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.*

*தற்போதைய நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே சாத்திய மான விடயமாக இருக்கின்றது. அத்தோடு, இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷிரிங்லாவின் இலங்கை வருகையின் போதும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப் படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நிறைவுக்கு வந்தபோது, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக இந்தியாவுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களை பகிர்வதாகவும் அறிவித்திருந்தார். இருப்பினும், அவரைச் சூழவிருந்த பருந்துகள் அவ்விதமான செயல்பட்டை முன்னெடுப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பத்தை அளிக்கவில்லை.*

*இவ்விதமான நிலையில், புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக பேசப்பட்டு சில காலம் வீணடிக்கப்பட்டது. தற்போது, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக உள்ளார். இவருடைய காலத்தில் இலங்கை சீனாவின் பக்கம் அதிகமாக சாய்ந்து விட்டது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.*

*இந்தநிலையில், அவருடன்சந்திப்பை நடத்திய இந்திய வெளி விவகார செயலாளர் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது பற்றிய பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். இதன்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலத்தையும், பலவீனங்களையும் புரிந்து கொண்டு, அதன்படி செயல்பட வேண்டிய அவசரத் தேவை உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.*



*இந்த ஒற்றைவரி கருத்து மிகவும் ஆழமானது. அவர் இவ்விதமான செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டியது இரண்டு நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளுக்கு மிகவும் முக்கியமானது. ஏனென்றால், 2009 இற்கு பின்னர் ஜெனிவா உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தளங்களில் இந்தியாவின் செயல்பாடுகளை கோட்டாபய புரிந்து கொள்ள வேண்டும்.*

*ஆகவே, இலங்கைக்கு தூணாக இருக்கும் இந்தியாவை புறமொதுக்கி விட முடியாது. எனவே, கோட்டாபயவும் புதிய அரசியலமைப்பு விடயத்திற்கு அப்பால் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும். இது பிராந்திய அரசியலுக்கும் நன்மையானது. அதேநேரம், இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் ஏகோபித்த நிலைப்பாட்டிற்கு வரவேண்டியுள்ளன.*

*தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தச் சட்டமே சாத்தியமானது என்பதை இந்தியா வெளிப்படுத்தி விட்டது. அதனை முழுமையான நடைமுறைப்படுத்துவதே முதற்கட்ட வெற்றியாக இருக்கும்.*

*இதற்காக தமிழ் தரப்புக்கள் தமக்குள் காணப்படும் அரசியல் நிலைமைகளை விடுத்து ஐக்கிய அணியாக பொதுத்தளமொன்றுக்கு வர வேண்டும்.*

*இதன் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் தற்போதைய நிலையில் அதுவே ஒரே தெரிவாக உள்ளது. அதற்கு அப்பால் வேறொன்றும் இல்லை என்றார்.*

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நவராத்திரி விழா!!





**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நவராத்திரி பூஜை நிகழ்வுகள் நேற்று (15) மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.

மாவட்ட கலாசார பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற நவராத்திரி பூசை நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பங்கேற்புடன் இடம்பெற்றது.

மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே.ஜெகதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி. இந்திராவதி மோகன், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை கொண்டு விளங்கும் முப்பெரும் தேவிகளுக்குரிய தினமாக இந்த நவராத்திரி தினம் ஒன்பது நாட்கள் அனுஸ்டிக்கப்படுகின்றது. பஜனை வழிபாடுகளுடன் ஆரம்பமான பூசையானது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெயதீஸ்வர சர்மா குருக்களின் தலைமையில் நவராத்திரி பூசை விசேட தீபாராதனையுடன் சகலகலா வள்ளி பாமாலை பாடப்பட்டு மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த பூஜைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை இன நல்லுறவை வெளிக்கொணர்ந்ததோடு இனநல்லுறவை வலுப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

பூசையின் நிறைவில் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிதிகளினால் சிறார்களுக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் Drum Seeder மூலம் நெல் விதைப்பு





**ஏ. எல்.எம்.ஷினாஸ்**

அம்பாறை மாவட்டத்தில் முதன் முறையாக *Drum Seeder* ஐ பயன்படுத்தி நெல் விதைக்கும் முறை நேற்று (15.10.2021) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஹேன்ட் ரிட்ச் (*Handrich*) விவசாய பராமரிப்புத் தீர்வுகள் மற்றும் கைத்தொழில் நிலையத்தின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டலுடன் நிறுவனத்தின் தலைவர் எஸ்.எல் முஹம்மது அன்வர் தலைமையில் அட்டாளைச்சேனை மீலாத் நகர் விவசாய பிரதேசத்தில் இடம்பெற்ற இன் நிகழ்வில்,

நஞ்சற்ற உணவு பாவனை, இலாபமீட்டும் நவீன விவசாய முறைகள், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேதனப் பசளை பயன்பாடு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு **Drum Seeder** முறையினை பாவித்து வரிசையில் நெல் விதைப்பதால் ஏற்படும் நன்மைகள்

குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ், பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர், விவசாய போதனாசிரியர் ஏ.எச்.எம். முபாறக், கமநல சேவை நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் எம். சம்சுதீன், ஹேன்ட் ரிட்ச் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பிரதேச விவசாயிகள், பிரதேச விதை நெல் விநியோகஸ்தர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# வாழ்வை மாற்றுவோம் அமைப்பினால் தாயக உறவுகளுக்கு நிவாரணம் உதவி





பிரான்ஸை தலைமையாக கொண்டு மனித நேய செயற்பாட்டாளர் றூபி தலைமையில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இயங்கி வருகின்ற வாழ்வை மாற்றுவோம் கலை கலாசார சமூக மேம்பாட்டு ஸ்தாபனம் முதன்முதலாக தாயகத்தில் கால் ஊன்றி உள்ளது.

தாயகத்தில் உள்ள உறவுகளுக்கு நேச சக்திகள் மூலமாக இது வரை காலமும் சேவைகளை மறைமுகமாக ஆற்றி வந்த வாழ்வை மாற்றுவோம் கலை கலாசார சமூக மேம்பாட்டு ஸ்தாபனம், இப்போது நேரடியாக சேவையாற்ற தொடங்கி உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பொதுநல செயற்பாட்டாளர் அஹமட் லெப்பை அன்ஸார் இவ்வமைப்பின் இலங்கைக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்நிலையில், வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய பிரதேசங்களில் வறிய குடும்பங்களை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு உலர் உணவு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவு சிவசக்தி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அதன் பரிபாலகர் ஜீவாகரன் ஐயாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், காரைதீவை சேர்ந்த பயனாளிகளுக்கு பொருட்கள் கையளிக்கப்பட்டன.

# உளநல ஆரோக்கிய தினத்தில் மட்டு.கல்லடி வாவியை நீந்திக் கடந்த இளைஞன்!!







உலக உளநல ஆரோக்கிய தினம் ஆண்டுதோறும் ஒக்டோபர் 10ம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இத் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, கல்லடி பாலத்தின் அருகிலுள்ள வாவியை இளைஞர் ஒருவர் நீந்திக் கடந்தார். இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை (09) இடம்பெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 20 வயதுடைய அமலநாதன் சஞ்சீவன் எனும் இளைஞனே இவ்வாறு கல்லடி பாலத்தின் மட்டக்களப்பு நகர் பக்கமாக இருந்து கல்லடி பக்கமாக நீந்திச் சென்று உடல் உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

இவ் இளைஞன் நீந்துவதற்கு ஆரம்பத்தில் பொலிஸார் அனுமதி மறுத்தனர். பின்னர் பாதுகாப்பு உள்ளிட்ட முன்னாயத்தங்களை பரிசீலனை செய்தபின்னர் பொலிஸார் அனுமதியளித்துள்ளனர்.

தற்போதய கொவிட் தொற்று காலத்தில் அனைவரும் உள நலத்தையும் உடல் நலத்தையும் பேணவேண்டும் எனவும் இதுவரை கல்லடி பாலத்தில் சுமார் 30 பேர் குதித்து தற்கொலை செய்துள்ளதாகவும் இவ்வாறான தவறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக் கூடாது எனும் தகவலை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், இந்த சர்வதேச உள நல ஆரோக்கிய தினத்தில் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இந்த நீச்சல் நடவடிக்கையினை தான் மேற்கொண்டதாக அமலநாதன் சஞ்சீவன் தெரிவித்துள்ளார்.

# ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தில் நடைபெற்ற விஜயதசமி பூசை நிகழ்வு!





**(கிரிசாந் மகாதேவன்)**

இந்துக்கள் அனுஸ்டிக்கும் விரதங்களுள் நவராத்திரி விரதம் முக்கியமானதாகும். சக்தியை நோக்கி 9தினங்கள் விரதமிருந்து அனுஸ்டிக்கும் மகத்தான விரதம். இவ்விரதம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 09 தினங்கள் அனுஸ்டிக்கப்பட்டு நேற்றைய தினம் விஜயதசமி பூசை நிகழ்வு பல பாகங்களில் இடம்பெற்றது.

அந்தவகையில்நவராத்திரிவிழாவின்இறுதி நாள் விஜயதசமி பூசை வழிபாடு நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தினரினால் நேற்றைய (15.10.2021) மாலை வேளையில் இடம்பெற்றது.

இன் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற வளாகத்தில் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையின் செயலாளர் பொருளாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பங்களிப்புடன் சிறப்பானதாக இடம்பெற்றது.

மேலும் குறித்த பூஜை வழிபாடுகள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பாவலர் பஸீல் காரியப்பர்

இவர் 09.05. 1940 ஆண்டு சம்மாந்துறையில் பிறந்தார். சம்மாந்துறை அரசினர் ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்ற இவர்,கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி,பதுளை கார்மேல் பாடசாலை, ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவராவார். . அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆசிரியராக பயிற்சி பெற்று நல்லாசிரியராகப் பணிபுரிந்தார். தமிழாசான் கே. ஆர். அருளையாவின் வழிகாட்டலில் கவிதை எழுதத் தொடங்கினார். இவர் திருமணத்தின் பின்னர் கல்முனைக்குடியில் வாழ்ந்துவந்தார்.. இவர் பாணந்துறை தொட்டவத்தை கல்லூரி, சம்மாந்துறை மகாவித்தியாலயம்,கொழும்பு சிலேவ் ஐலண்ட் சாகிரா கல்லூரி,சம்மாந்துறை அல்-

**வாரம் ஒரு படைப்பாளி**

பஹறியா, சம்மாந்துறை அல்-மக்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.இந்த அனுபவ பலத்துடனும்,பன்மொழிப் புலமையினாலும், பிரதேச, மற்றும் தேசிய உள்ளடக்கம் மிக்க கவிதைகளை இவர் எழுதியுள்ளார். 1960 களின் பின்னர் தென்கிழக்கு பிரதேச கவிஞர்கள் வட்டத்துள் இவர் இருந்துள்ளார். இவர் சுதந்திரன்,சிந்தாமணி,தினபதி,வீரகேசரி, முற்றது மல்லிகை,கவிதாஞ்சலி ஆகிய பத்திரிகைகளில் தனது கவிதைகளை எழுதியுள்ளார். 'அழகான ஒரு சோடிக் கண்கள். 'பிரியதர்ஷினி",சாட்டை இரணக்கோல் ','தங்கம்மா "உறவு', 'சிரி சிரி' ' துளசி', 'ஹலால் ' உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதிள்ளார். சமயப் பார்வை,சமூக விமர்சனம்,ஆழமான மனிதாபிமானம், கிண்டல் தொனி , பிரதேச வழக்குகள்இவரது கவிதைகளின் பண்புகளாக இருந்தன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலங்கை



இலக்கிய பேரவை,கொழும்பு தமிழ் சங்கம், போன்ற அமைபுகளால் நடத்தப்பட்ட போட்டிகளில் இவரது'உயிர் தங்கத்தாத்தா' 'தங்கம்மா' ஆகிய படைப்புகள் தேசிய மட்டத்தில் பரிசுகளை பெற்றன. 1978 ம் ஆண்டு கொழும்பு தமிழ் சங்கம் நடத்திய போட்டியில் இவரது 'தங்கம்மா' பரிசு பெற்றது. அதைகொண்டாட சம்மாந்துறை மக்கள் இவருக்கு பாராட்டு விழா எடுத்தனர். அந்த விழாவில் கலந்துகொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 'கவிஞன் தோன்றி விட்டான் கண்டீர்' என்று கூறி பசீல காரியப்பருக்கு'பாவலர்' என்ற பட்டத்தை வழங்கினார். இந்த கௌரவம் இவருக்கு கிடைத்த மகுடம் என்று ஆனது. இவர் 'நிதானி' என்ற புனை பெயரிலும் பல படைப்புகளை எழுதியுள்ளார். இவர் பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன் அவர்களுடன் நட்பு கொண்டிருந்தார். அதனால் சில்லையூர் மூலமாக இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'நிர்மலா' என்ற படத்தில் நடிகராகவும் தோன்றினார். இவரது 66 கவிதைகளை உள்ளடக்கிய 'ஆத்மாவின் அலைகள்' கவிதை நூலை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் சங்கம் 2001 ல் வெளியிட்டு பாவலரை கௌரவப்படுத்தியது. இவரது 'தங்கம்மா' நெடுங்கவிதை பழைய பாடத்திட்ட தரம் 10,11, இலக்கிய தொகுப்பில் இடம் பிடித்திருந்தது. இவரது 'துளசி' என்ற கவிதை இவர் அனுபவித்த தமிழ்,முஸ்லிம் வாழ்வியலை படம்பிடித்து காட்டியது. எதையும் நிதானித்து,எதையும் அனுபவித்துக்கொண்டே பேசும் ஒரு கவிஞராக, நல்ல மனிதராக இவர் வாழ்ந்துள்ளார். பாவலராகவே மணம் வீசிய பசீல் காரியப்பர் 16,02. 2006 ல் மறைந்துள்ளார். அவரது படைப்புகள் என்றும் அவரது 'அழகான ஒரு சோடிக் கண்கள்' போல மின்னிக் கொண்டே இருக்கும். வாழ்க அவர் புகழ் நாமம்.

**கோவிலூர் செல்வராஜன்**

# மட்டக்களப்பு குசலான் மலை குமரன் ஆலயம்
## தமிழர் தொன்மங்களின் அடையாளம்

மட்டக்களப்பு கரடியனாறு கிராமத்தின் வடமேற்காக சுமார் 3 கிலோமீற்றர் தூரத்தில் குசலான் மலை காணப்படுகிறது. சுமார் 250 அடி உயரமும் 200 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட நீண்ட தட்டையான மலைப்





–சஞ்சீவி சிவகுமார்–

படுக்கையாக இது காணப்படுகிறது.

மலைகளில் ஏறக்குறைய 70 படிக்கட்டுகளையும், சுற்றயலில் பத்துக்கு மேற்பட்ட குகைகளையும் மலைச்சுனைகளையும் தன்னகத்தே கொண்டு அழகிய குமரக் கடவுளின் வதிவிடமாக இம்மலை போற்றப்பட்டு வருகிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஆதித்தமிழ் மொழியை பிரதிபலிப்பனவாகவும் திசன் பெருமகன், அபயன், நாகன் முதலான தமிழ்ப் பெயர்களைக் கொண்டும் அமைந்துள்ளன. நாக வடிவிலமைந்த அமைப்புகள் நாகவழிபாடு இங்கு நடைபெற்றதைக் காட்டுகின்றன. குசலாணன் என்னும் பெயருடைய தமிழ்ச் சிற்றரசன் இப்பகுதியில் ஆட்சி செலுத்தி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அத்துடன் 'ஆமை குத்தி மக்கள்' எனப்படும் வேடுவ மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. குமார தெய்வ வழிபாட்டு முறைகளை கொண்டமைந்த வேடர்களின் வழிபாடும் இங்கு நடைபெறுவதாக அறியக் கிடைக்கிறது.

இங்குள்ள குகைகளின் மேற்பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் நீர் வடிப்பு விளிம்புகளைக் கொண்டு இப்பகுதியில் நாகரீகம் மிக்க சமூகம் வாழ்ந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இங்கு காணப்பட்ட கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் செய்திகள் வழங்கப்பட்ட தானங்களையும் பௌத்த சமயநெறி குறித்த தகவல்களையும் கொண்டிருப்பதாக பேராசிரியர் பரணவிதான வாதிடுவார். பல்லின பண்பாட்டு ஈடுபாடு கொண்ட தமிழர்கள் பௌத்த நெறியையும் பின்பற்றினார்கள் என்பதே உண்மை. குசலான் மலை தமிழர்களின் பண்பாட்டுத் தொன்மங்களின் அடையாளமே ஆகும்.

# மலையகத்தில் எரிகிறது



மனசறுந்த மனிதர்களே
தேயிலைக் கொழுந்துகளே
தேனீராய் எவ்வளவு
குடித்தோம் நாமும்
அதைப் பறிப்பவள் பட்டினியாய்
கிடக்கிறாள் பாராயோ?

அட்டைக்கடியும் அஞ்சரை னாவும்
சீமையில் வாழ்வதற்கா
சூரியன் வீட்டுக்குள்
மழை வெள்ளம் குசினுக்குள்
எப்படித்தான் வாழ்வது அவர்கள்
கந்தையும் சிந்தையும்
கலங்குது பாராயோ!

தகரக்கொட்டிலும்
ஈக்கிள் கூரையும்
கரைகிறது வெப்பத்தில்
தட்டி புரட்டிய ரொட்டியும்
தட்டிலே உருகிழங்கு மசியலும்
வெந்து தணிகிறது பாராயோ!

மலையிறங்கி மலையிறங்கி
பள்ளி போகும் புள்ளிமான்கள்
பிஞ்சு போன புத்தகப்பை
சாம்பளாகி கிடக்குதம்மா
எரிந்து போன கல்வியைத்தான்
கிட்டப்போயும் பாராயோ?

படிச்சுப்போன மனுசாக்களும்
பட்டினியப் பாக்கவில்ல
கட்டி வந்த சீமதுர
காலம் எல்லாம் கலங்கி நிற்பான்
வீடும் கட்ட வழியில்லையே
காணி வாங்க முடியலயே
ராகலையில எரிகிறது
ராத்திரியில் எரிகிறது
கண்விழித்தும் பாராயோ?

அரசியலை செய்துகொண்டு
மனசு வெந்துபோகச் செய்யுறாங்கள்
நொந்து போயி நொந்து போயி
வாடிப்போன தேயிலைகள்
மலையகத்தில் எரிகிறது
பார்க்க முடிஞ்ச விழிகளாச்சும்
மடல் திறந்து பாராயோ?

**என் .நிலவிந்தன்**

கலம்பகம்
க.மங்களேஸ்வரி

# வன்முறை கலாசாரம்

ஒருவரின் விருப்பத்திற்கு எதிரான அனைத்து செயற்பாடுகளும் வன்முறையாக கருதப்படுகின்றன. இன்று உலகில் வன்முறைகள் அதிகரிக்கின்றன என்கிறோம். அவற்றை ஏற்படுத்துபவர் யார்? என்பதோடு அதற்கான சூழல் என்ன? எங்கிருந்து வன்முறை கலாச்சாரம் உருவாக்கப்படுகின்றது என்பதனையும் ஆராயவேண்டியுள்ளது.

பொதுவாக வன்முறையானது அதிகாரம் சார்ந்தவர்கள் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவதற்காக ஏற்படுத்தபடும் ஓர் முறையற்ற நடப்பாகும். இதனை இன்னும் விரிவாக பார்த்தால் அதிகாரம் உள்ளவர்கள் அதிகாரம் குறைந்தவர்களிடமும், பலமானவர்கள் பலவீனமானவர்களிடமும் தமது மேலாதிக்க உணர்வினை நிலை நாட்டுவதாகும். அதிகாரம், பலம் இவை இரண்டிலும் உடல் வலிமை, வீரியம் என்பன வெளிப்படுதப்படுகின்றன. வலிமை என்பது ஆதிக்கத்துடனும், அதிகாரத்துடனும் தொடர்புபட்ட வன்முறையுடன் இணைந்திருக்கின்றது.



பெரும்பாலும் பால் நிலை அசமத்துவம் பற்றியோ, சமூகத்தில் நிலவும் ஏற்றதாழ்வான வன்முறைகள் பற்றியோ கதைக்கும் போது அதிகாரதிற்கு உட்படுப்பவர்கள் பற்றியே கதைக்கிறோமே தவிர அதிகாரம் அல்லது ஆதிக்கம் செலுத்துப்பவர் அல்லது உட்படுத்துபவர் யார் என்பது பற்றி நாம் அக்கறைப்படுவதில்லை. ஏனெனில் வன்முறையை இல்லாது ஒழிக்க வேண்டுமெனின் அவை பற்றிய பூரண விளக்கமும் அறிவும் எமக்கு வேண்டியது அவசியமாகும். வன்முறையானது குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாசார வன்முறைகளாக பாகுபடுத்தப்படுகின்றன. இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுப்பவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாகவே காணப்படுகின்றனர். காரணம் ஆண்கள் அதிகாரம் உள்ளவர்களாகவும் பலமானவர்களாகவும் அர்த்தப்படுத்தப்படுவதனாலேயே பெண்களை அடக்கி ஆளமுற்படுகின்றனர். பெண்களை பொறுத்தவரையில் வீட்டில் கணவர் மற்றும் ஆண் உறவினர்களாலும் வெளியிடங்களில் வேறு ஆடவர்களாலும் வன்முறைக்கு உற்படுத்தப்படுகின்றனர். இவை வன்முறை கலாச்சாரமாகவே கருத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் அனைத்து விதமான வன்முறைகளும் பெண்களுக்கு உடல், உள, பாலியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி இவ்வாறான துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் பெண்கள் சுயமாக சிந்தித்து சுதந்திரமாக முடிவுகளை எடுக்கவும், தமது சுய ஆற்றல் ஆளுமைகளை வளர்த்துக்கொள்ளவும் முடியாத அளவிற்கு வன்முறை சார்ந்த கலாச்சாரம் தடையாக அமைகின்றது. எனவே சமூகத்தில் வன்முறை கலாச்சாரமானது இல்லாதொழிக்கப் படுமானால் அனைத்து விதமான துறைகளிலும் பெண்களின் முன்னேற்றம் மிளிரும் என்பது மிகையல்ல.


**தனலெட்சுமி முரசொலிமாறன் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO)**
**கல்முனை**




தாய் மடியில் தவழ்ந்தே தாலாட்டை
ரசித்தே தலையாட்டித் தூங்கினேனே
தலையணையாய் அவள் முந்தானையில்
தாய்ப்பால் அருந்தி வாய் வழி
வழிந்ததுவும்
தரையில் மண் அள்ளி தலையில்
கொட்டி மகிழ்ந்ததுவும்
விரல்கள் பற்றி விழுந்தெழுந்ததுவும்
பாதம் எட்டி வைத்தே
பாய்ந்து பாய்ந்து நடந்ததுவும்
வாயைப் பிடித்தே மருந்து பருக்கியதும்
வானில் நிலாக் காட்டி
சோறு பிசைந்தூட்டியதும்
வாசலில் வந்தே வழியனுப்பியதும்
வாரத்தில் ஒரு முறை எண்ணெய்
தேய்த்துக் குளிப்பாட்டியதும்
பட்டுத்தாவணி உடுத்தி பொட்டும்
வைத்து பெண்ணாய் எனை அழகு
பார்த்ததுவும்
சேலையிலே ஊஞ்சல் கட்டி
சேர்ந்திருந்தே ஆட்டி விட்டதுவும்
சிறு நோயுற்றாலும் நொந்து கண்ணீர்
சிந்தியதும்
எழுத்தாணி பிடித்தே அழகாய் அகரம்
பழக்கியதும்
தாயை விட்டுத் தூரம் வந்ததும் பசுமை
நினைவுகளாய் ஞாபகம் வருதே...

**கவிக்காதலன்**
**குலசிங்கம் கிலசன்**

# குங்குமம் வைப்பதன் சிறப்பு



நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தால், தனிப்பலன் கிடைக்கும் என்பதை அனுபவப்பூர்வமாக உணரலாம். நெற்றியில் குங்குமம் வைக்கும் பெண்களை பார்ப்பது என்பது, தற்போது அறிதாகவே இருக்கிறது. இப்போது எல்லாம் ஸ்டிக்கர் பொட்டுதான். குங்குமம் வைப்பதன் மகிமை குறித்து தெரியாதவர்கள்தான், ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொள்கிறார்கள். குங்குமம் வைத்துக் கொள்வதால் ஏற்படும் பலன்களை பார்ப்பதற்கு முன், குங்குமம் எப்படி தயாராகிறது என்பதை பார்ப்போம்.

படிகாரம், சுண்ணாம்பு, தண்ணீர், மஞ்சள் ஆகியவற்றை சேர்த்துதான் குங்குமம் செய்ய வேண்டும். இதில் சேர்க்கப்படும் மஞ்சள் நாளடைவில் இரும்புச்சத்தாக மாறிவிடும். படிகாரம், கிருமிநாசினி என்பதால் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் வராது. தொற்று நோய் கிருமிகளும் நெருங்காது. மூளைக்கும், உடலின் பிற பகுதிகளுக்கும் செல்லும் நரம்புகளுக்கு நெற்றி வகிட்டில் குங்குமம் இடுவதால் சக்தி கிடைக்கிறது. மூளைக்குச் செல்லும் நரம்புகள் அதிகமான உஷ்ணத்தை மூளைக்கு அனுப்பாமல், அதை கட்டுப்படுத்தக் கூடிய இடம் நெற்றி. அந்த நெற்றியில் குங்குமம் இடுவதால் சூடு தணிகிறது. இதனால் குங்குமம் இட்டுக்கொள்பவருக்கு புதிய சக்தி கிடைக்கிறது. குங்குமம் முறையாக தயாரித்திருந்தால்தான் இந்த பலன்களை அனுபவிக்க முடியும். கலப்படமான குங்குமத்தை இட்டுக் கொள்வதால் சில பிரச்சினைகள் வரலாம். ஆன்மிகத்தில் முக்கிய இடம் வகிக்கும் குங்குமம், அழகு சாதன பொருட்கள் வரிசையிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்

# “இல்லத்து வழிக்காடு” நூல் வெளியீடு








ஆசிய நிலையத்தின் அனுசரனையுடன் GAFSO நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் மக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக GAFSO வினால் “இல்லத்து வழக்காடு” எனும் புத்தக வெளியீடு 12.10.2021 ம் திகதி காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வெளியிட்டாளர் . A.J.காமில் இம்டாட் திட்டப் பணிப்பாளர் GAFSO] அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் S.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்கள். மேலும், சிறப்பு அதிதிகள் வரிசையில் மேலதிக பிரதேச செயலாளர் S.பார்த்தீபன் மேலும், காரைதீவு பிரதேச செயலகத்தின் நிர்வாக அதிகாரிகளும், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுரேகா எதிரிசிங்க, காரைதீவு பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஜெனிட்டர், GAFSO உத்தியோகத்தர்கள், மாதர் அமைப்பின் உறுப்பினர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழர் வழிபாடுகளும் சடங்குகளும் -03



தமிழர் வழிபாடுகளும் சடங்குகள் எனும் தலைப்பில் ஈழத்தில் புகழ்பெற்ற கண்ணகை அம்மன் ஆலயங்களில் மூன்று கண்ணகை அம்மன் ஆலயங்களின் வரலாறு பற்றி சற்று ஆராய்வோம்.

அந்தவகையில் வற்றாபளை கண்ணகை அம்மன் ஆலயம் செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயம் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயங்களின் வரலாறுகளை பற்றி சற்று ஆராய்வோம்.வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வரலாறு தமிழ் நாட்டில் கண்ணகை அம்மன் ஆலயம் அமைக்க பட்ட காலம்

தொடக்கம் இவ்வாலயம்அமைந்துள்ளது. கஜபாகு அரசானால் இலங்கையில் ஆரம்பிக்க பட்ட பத்தாவது ஆலயமாகஇவ்வாலயம் அமைந்துள்ளது. கண்ணகையம்மாள் வந்தமர்ந்த பத்தாவதுபளை காலப்போக்கில் மருவி வற்றாப்பளை எனும் பெயர் கொண்டு அழைக்க படுகிறது.

முன்பு ஒரு காலத்தில், நந்திக் கடலோரத்தில், ஆட்டிடையர் குலச் சிறுவர்கள் ஒரு முதுமை வாய்ந்த அம்மையார் ஒருத்தி மரத்தின் கீழ இருப்பதைக் கண்டார்கள். தனக்குத் தங்குவதற்கு இடமில்லை என அவவம்மையார் சிறுவர்களிடம் முறையிட்ட போது அவர்கள் மரத்திற்கு அருகே ஒரு குடிசை அமைத்து கொடுத்தது மட்டுமன்றி அம்மையாருக்கு உண்பதற்கு பொங்கலும் செய்து கொடுத்தார்கள். மாலைப் பொழுதானதும் குடிசைக்குள் விளக்கு ஏரிவதற்கு எண்ணெய் இல்லையே என்று மனம் வருந்தினர். அவர்கள் கவலைப் படுவதைக்கண்ட அம்மூதாட்டியர் பிள்ளைகளே கடல் நீரை எடுத்து எண்ணையாகப பாவித்து, திரிவைத்து விளக்கேற்றுங்கள் என்றார். இன்றும் கடல் நீரில் அம்மனுக்கு விளக்கு எரிப்பது வழக்கமாய் இருந்து வருகிறது.

தனக்கு குடிசை அமைத்து விளக் கேற்றி கொடுத்த சிறுவர்களைப் பார்த்து தனது தலை கடிக்கிறது பேன் பார்த்து விடும்படி கேட்டார். மூதாட்டியாரின் தலை முடியை வகுத்த சிறுவர்கள், தலையெல்லாம் கணகளாயிருப்பதைக் கண்டு பயந்து அலர, “நான் ஒரு வைகாசித் திங்களன்று திரும்பவும் வருவேன்” எனக் கூறி மறைந்தார். சிறுவர்கள் நடந்ததை ஊர் சனங்களுக்கு எடுத்துச்சொன்னபோது அந்த அதிசயம் நடந்த குடிசையிருந்த இடத்தைச் சிறுவர்கள் அவர்களுக்கு காட்டினார்கள். அந்த குடில் இருநத இடத்தில் ஏதோ அதிசயம் இருப்பதாகக் கருதி அவ் விடத்தில் கண்ணகி அம்மனுக்கு கோவில் கட்டி, வைகாசி பௌர்ணமி தினத்தன்று பொங்கல் பொங்கி கடல் நீரில் விளக் கேற்றி வழிபடத் தொடங்கினர். ஆதிகாலத்தில் அம்மன் காட்சி கொடுத்த ஆடு மேய்க்கும் பரம்பரையை சேர்ந்தவர்களே கோவில் பூசை வழிபாட்டில் பிரதான பங்கு வகிக்கிறார்கள்.

வைகாசிப் பொங்கலுக்கு ஒரு கிழமைக்கு முன்பே, கோயில் பூசாரி, பக்தர்கள், கோயில் நிர்வாகிகள், ஒரு பித்தளைக் குடத்தை மேளதாளத்தோடு சிலாவத்தை என்ற கட்றகரைக்கு எடுத்துச் சென்று, கடல் நீரை குடத்தில் நிறப்புவார்கள். கடல் அலை பொங்கி வரும் போது குடத்தை சரித்து, கடல் நீரை ஒரே தடவையில் மொண்டி அள்ளுவது வழமையாக இருந்து வருகிறது. குடத்தை நீரோடு முள்ளியவளையில உள்ள காத்த விநாயகர் ஆலயத்தில் வைப்பார்கள்.

வைகாசி பொங்கல் தினத்தன்று விநாயகர் கோவிலில் இருந்து கண்ணகி அம்மன் கோவிலுக்கு தண்ணீர்க் குடத்தை எடுத்துச் சென்று, மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் அம்மனுக்கு குடத்தில் உள்ள கடல் நீரில் விளக்கேற்றி வழிபடுவர்ாகள். பொங்கி, நடுச்சாமம், பிராமணர்கள் மந்திரம் ஓத, கட்டாடி உடையார் என வழங்கப்படும் ஒருவர் பொங்கல் பானையை மடியில் வைத்து, அதைச் சுற்றி மாவிலை கட்டி அடுப்பில் வைப்பார். உடையாருக்கு உருவந்து, அடியார்களுக்கு கொடுக்கும் அரிசியை ஒவ்வொரு திசையிலும் வானத்தை நோக்கி உயர வீசுவார். அவர் வீசும் அரிசி அம்மனின் தோழிகளைப் போயடையும் என்பது நம்பிக்கை. மேலே எறிந்த அரிசி, மண்ணிலோ அல்லது பக்தர்கள் தலையிலோ விழுவதில்லை. இதுவும் அம்மனின் அற்புதங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

திருக்குறளில் அனிச்ச மலர் மென்மையான மலராக குறிப் பிடப்பட்டுள்ளது. ஒவவொரு தலத்துக்கும் தல விருட்சம் என்று ஒன்றுண்டு. வற்றாப்பளை அம்மனின் மூலஸ்தானத்துக்கருகே அனிச்ச மரம் ஒன்றுண்டு. இந்த மரத்துக்கு ஒரு வரலாறு உண்டு.

போர்த்துக்கேயர் தம்மதத்தைத் தவிர வேறு மதங்களை மதிக்காதவர்கள். பல இந்துக் கோவில்களையும், புத்த விகாராக்களையும் இடித்துத் தள்ளியவர்கள் என்கிறது வரலாறு. போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது முல்லைத்தீவுப் பகுதியும் அவர்களது ஆட்சிக்கு கீழ் இருந்தது. ஒரு போர்த்துக்கேய அதிகாரி ஒவவொரு முறையும் கோவிலை குதிரையில் தாண்டிச் செல்லும் போது, அம்மனை பரிகாசம் செய்வாராம். ஒரு நாள் கண்ணகி அம்மன் கோவில அருகே வந்த போது “எங்கே உங்கள் கடவுள் அதிசயங்கள் செய்வதாக கேள்விப்படடேன். அது உண்மையானால் எங்கே இப்போது செய்து காட்டட்டும் “என்றார் அனிச்ச மரத்தின் கீழ், குதிரையில் அம்ர்ந்தபடியே அம்மனை அகங்காரத்தோடு தூற்றியவாறு. உடனே தீடிரென அனிச்ச மரம் குலுங்கத் தொடங்கியது. காற்று பயங்கரமாக வீசத்தொடங்கியது. மரத்தில் இருந்த அனிச்சம் காய்கள், அம்மனைப் பரிகாசம் செய்த அதி காரி மேல்விழுந்தன. அனிச்சம் காய்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது அதிகாரி காயமடைந்து குதிரையிலிருந்து, மூர்ச்சித்து கீழே விழுந்தான். அவன் அகங்காரம் அடங்கியது. அதன் பின் இன்றுவரை அந்த அனிச்ச மரம் பூப்பதும், காய்ப்பதும் இல்லை. அதுவும் அம்மனின் அதிசயங்களில் ஒன்று.



பத்தினித் தெய்வமான கண்ணகி அம்மனின் காற்சிலம்புக்கு சின்னம்மை, பெரியம்மை, சின்னமுத்து, கூவக்கட்டு, குக்கல் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் அதிசயமான சக்தி உண்டு என்பது மக்களின் பொதுவான நம்பிக்கையாகும்.



எழுத்துவழவம்
யோ.துஸ்யந்தன்.
கிரான் குளம் ஆஞ்சநேயர் ஆலயம்
Thushiyanthanthushiyanthan@gmail.com




**கொரோனா உயிரிகளிடமிருந்து பரவியதா? உயிரியல் ஆயுதமாக ஏவப்பட்டதா?**

# 26 பேருடன் புதிய குழுவை நியமித்தது உலக சுகாதார ஸ்தாபனம்

கொரோனா வைரஸ் எங்கிருந்து, எதிலிருந்து பரவியது என்பதைக் கண்டறிவ~தற்காக உலக சுகாதார ஸ்தாபனம் 26 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது. வைரஸ் பரவியதைக் கண்டுபிடிப்பதற்க~ான கடைசிச் சந்தர்ப்பம் இந்தக் குழுவின் கையில் உள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கென ஏற்கனவே, ஆறு பேரடங்க~ிய குழு நியமிக்கப்பட்டும் உண்மை~யக் கண்டறிய முடியாமற்போனது. இந்தக் குழு,சீனாவின் வூஹான் மாகாண~த்துக்குச் சென்று அங்குள்ள ஆய்வ~கத்தில் சோதனை நடத்தியதில் கொரோ~னா வைரஸை,சீனா ஏவி விட்டதற்கான போதிய தடயங்களை பெற முடியாத நிலைமை ஏற்பட்டிரு ந்தது.விலங்கிலிருந்தா அல்லது மனிதனிலா கொரோ~னா கிருமிகள் பரவின என்ற சர்ச்சை,சீனா



வின் சந்தேகத்தை ஓரளவு விலக்கியிருந்தன.

சீனாவின் வூஹான் மாகாணத்தில் 2020 இல் ஏற்பட்ட கொரோனா வைரஸ்,உல~கம் முழுவதும் பரவியதில் பல சர்ச்சைகள் எழுந்தன. உயிரியல் ஆயுதமாகப் பரவித்து, வல்லரசுகளை வீழ்த்தும் நோக்கில், சீனா இந்த வைரஸை அனுப்பியதா என்ற அச்சம் ஏற்படுமளவுக்கு உயிரழிவுகள் ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்~தில்,நம்பிக்கையூட்டும் வகையில்,உலக சுகாதார ஸ்தாபனம் நடந்துகொண்டதை எவரும் மறப்பதற் கில்லை.ஆத்மீகத்~துக்கும் லௌகீகத் துக்கும்இடையிலே~ற்பட்டிருந்த விவாதங்கள் உச்சத்தை தொட்டிருந்த இரண்டாம் அலையிலும் மருத்துவத்தின் தைரியத்தில்,உலக சுகா~தார ஸ்தாபனம் நம்பிக்கையூட்டியிருந்தது.

இந்நிலையில்,கடைசியாக நிய மிக் கப்பட்டுள்ள 26 பேரடங் கிய இந்தக் குழுவின் அறிக்கையின் பின்னரே, உலகம் கொரோனாவிலிருந்து விடுபட்டுவிட்டதா?இல்லையா?என்ற தீர~மானத்தை அறிவிக்க உள்ளது. எனி~னும்,இந்தக் குழுவை சீனா அனுமதித்து அனுசரிக்கும் நிலைமைகளில்தான்,இந்தத் தீர்மானம் தங்கியுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## முஸ்லிம் உலகின் முதலாவது அணு விஞ்ஞானி அப்துல் காதர்மரணம்

பாகிஸ்தான் அணுவிஞ்ஞானி டொக்~டர் அப்துல்காதர் இன்று 85 வயதில் காலமானார்.1982 ஆம் ஆண்டு,அணு ஆயுதத்தைக் கண்டுபிடித்து,முஸ்லிம் உலகில் அணுஆயுதமுள்ள முதல~ாவது நாடென்ற பெருமையைப் பாகிஸ்~தானுக்குப் பெற்றுக்கொடுத் தவர் இவர்.

ஈரான்,லிபியா மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளுக்கு அணுஆயுதம் பற் றிய தொழினுட்ப அறிவை வழங்கிய~தால்,இவரை மேற்குலகம் கடுமையாக விமர்சித்தது.கடந்த 2006 இல் புற்று நோய்க்குள்ளான டொக்டர் காதிர்க~ானுக்கு சிகிச்சையளிப்பதில், பாகிஸ்தான் அரசு மிகத் தீவிரமாக அக்கறை எடுத்தது.

இந்நிலையில்,கடந்த வாரம் இவரது உடல்நிலை மோசமடைந்ததால், வைத்~தியசாலையில் அனுமதிக்கப் பட்டு (10) உயிரிழந்தார். இந்திய,பாகிஸ்தான் அரசுக~ளின் ராஜதந்திர நெருக்கடிகளை அடிக்கடி சமப்படுத்தும் வகையில் இந்த அணுப்பல~ங்கள் அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சிங்கு எல்லையில் தலித் விவசாயி படுகொலை

டெல்லி மற்றும் ஹரியாணாவ~ின் சிங்கு எல்லையில் இந்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் போராட்டம் நடத்தி வரும் பகுதிக்கு அருகே விவசாயி ஒருவர் கொல்லப்பட்டு அவரது சடலம் போலீஸ் தடுப்பில் தலைகீழாக தொங்க விடப்பட்ட சம்பவம், விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி எட்டுப்பேர் காயம்



லெபனான் தலைநகர் பெய்ரூத்~தில் கடந்த வியாழக்கிழமை (13) நடந்த ஆர்ப்பாட்டத்தில்,ஒரு~வர் கொல்லப்பட்டதுடன்,எட்டுப் பேர் காயமடைந்தனர்.நீதிபதி ஒருவரை இடம்மாற்றுமாறு "ஹிஸ்புல்லா" அமை~ப்பினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கறுப்பு ஆடைகள் அணிந்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட "ஹிஸ்புல்லா" அமைப்பினர், துறைமுகத்தில்,நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் பற்றிய விசாரணைகளை நடாத்தும் நீதிபதி ரத்பதியை இடமாற்றுமாறு கோரி கோஷம் எழுப்பியதுடன்,அரச கட்டடங்களை நோக்கி கற்களை வீசினர். அமெரிக்காவின்,கைப்பிள்ளையாக லெப~னான் அரசும், நீதிபதியும் செயற்படுவ~தாகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

லெபனான் அரசாங்கத்தின் திறமை யில்ல~ாத நிர்வாகத்தால்,கடந்த இரண்டு வருட~ங்களுக்குள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாணயத்தின் (பௌண்ட்) பெறுமதி தொண்ணூறு வீதம் வீழ்ச் சியடைந்து ள்ளது. அமெரிக்க டொலரின் பெறுமதி 21000 பௌண்டாக உயர்ந்~துள்ளதால்,பணவீக்கம் அதிகரித்துள்ளதாக ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

## ஆப்கானியரின் வெளிநாட்டு வைப்புக்களை உள்நாட்டில் புழக்கத்துக்கு விட ஜி20 மாநாட்டில் இணக்கம்



மனிதாபிமான உதவியாக ஒரு பில்லியன் யூரோவை ஆப்கானிஸ்தானுக்கு வழங்குவதற்கு ஜீ20 மாநாட்~டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு,குடிநீர்,மின்சாரம்,இருப்பிடம் மற்றும் அயல் நாடுகளில் தஞ்சம்புகுந்த ஆப்கானிஸ்தானியர்களை நாட்டுக்கு அழைத்து வருதல் என்பவற்றுக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளன.

இத்தாலியின்,ஏற்பாட்டில் இந்த வாரம் நடந்த இந்த ஜீ20 மாநாட்டில்,ரஷ்ய, சீனத் தலைவர்கள் பங்கேற்காத போதிலும், தங்களது பிரதிநிதிகளை அனுப்பி வைத்தனர்.ஆப்கானிஸ்~தா னில் ஏற்பட்டுள்ள மிக மோசமான மானிட அவலங்களைப் போக்கும் வழிகள் குறித்து இந்த மாநாடு ஆராய்ந்தது. வெளிநாடுட்டு வங்கிகளில் வைக்கப் பட்டுள்ள ஆப்கானிஸ்தானியரின், நிதிகளை உள்நாட்டில் புழக்கத்துக்கு விடுதல்,வெளியேறிச் சென்ற ஆப்கானியர்களை மீள அழைத்து வருதல்,அ~டிப்படைவாதத்தைப் பலமிழக்கச் செய்தல் என்பவற்றை அவசரமாகச் செய்யுமாறும் தலிபான் அரசுக்கு ஜீ20 (வளர்ச்சியடைந்த நாடுகள்) மாநாடு வலியுறுத்தி உள்ளது.